**<u>Deposition of witness</u>**

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR</u>**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 271/2016 |
| Deposition of Witness for | : | PW2 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.ராமசாமி |
| Father's name | : | திரு.ஆர். சுந்தர ராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 9th Day of March 2026.

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

நீதிமன்ற ஆணையர் முதல் விசாரணைக்காக சாட்சி கூண்டில் ஏறிய பின்பு பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 16ன் கீழ் உரிய காரணங்களில் காண்பித்து மனு தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபனை மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் ஆவணங்களை பார்வையிடும்போது 07.02.2026 தேதியில் வாதி தரப்பில் சாட்சி பட்டியல் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையார் சாட்சியாக விசாரணை செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு

23.02.2026 ம் தேதி நீதிமன்ற ஆணையர் சாட்சிய விசாரணைக்காக முன்னிலையாகின்றபோது வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு செய்ததால் 03.03.2026ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டு அதன்பின்பு இன்றைய தினம் 09.03.2026 தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நீதிமன்ற ஆணையர் திரு. ராமசாமி அவர்கள் முன்னிலையாகிறார்கள். எனவே நீதியின் நலன் கருதி சாட்சிய விசாரணை நடைபெறுகிறது.

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற உத்தரவின்படி தாவா சொத்தை பார்வையிட்டு சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த அறிக்கை மற்றும் வரைபடம் Ex.C1, Ex.C2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

1. ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்துடன் A, B, E பகுதியை வைத்துதான் அறிக்கை அமைந்துள்ளது என்றால் ஆமாம். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள AB, BE பகுதிகளை நான் அளந்தேன். அறிக்கை பத்தி 3ல் E பகுதியில் கல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் தாவா சொத்தை பார்வையிட்டது சம்மந்தமாக புகைப்படங்கள் மற்றும் வீடியோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகைப்படம் மற்றும் சிடி தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் நான் அறிக்கையுடன் தாக்கல் செய்த புகைப்படங்கள் என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் (64 புகைப்படங்கள்) **நீ.ம.சா.ஆ.3 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது.

அறிக்கையில் E என்று காண்பிக்கப்பட்டுள்ள பகுதி நீ.ம.சா.ஆ.3

புகைப்படங்களில் எந்த புகைப்படத்தில் உள்ளது என்றால் இரு தரப்பிலும் கல் இருந்தது சம்மந்தமாக புகைப்படம் எடுக்க கேட்கவில்லை. கல் இருந்திருந்தால் நான் புகைப்படம் எடுத்திருப்பேன் என்றாலும் கல் இல்லை என்பதால்தான் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கல்லை கண்டுப்பிடுக்க வேண்டுமென்பதற்காகதான் வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்று அறிக்கை பாரா 3ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சர்வே எண்கள் 5/15C, 5/10C, 5/10D1 ஆகியவை தான் மனு சொத்து என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள E என்ற பகுதியில் இருந்து அளந்து பார்த்தால் கூட சர்வே எண்கள் 5/15C, 5/10C, 5/10D1 ஆகியவற்றை சரியாக அளவீடு செய்யமுடியவில்லை என்றால் அளவுகள் சரியாக கிடைக்கவில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. சிவகங்கை சாலையில் இருந்தும் வண்டியூர் 1 பிட் எல்லக்கோட்டிற்குள் இருக்கும் புலங்களின் அளவுகளை சரிப்பார்த்தும் வண்டியூர் 1 பிட் மேலமடை 2 வது கிராமம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள எல்லை கோடு நிர்ணயம் செய்யப்பட்டது என எனது அறிக்கையில் பாரா 3ல் குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக சிவகங்கை சாலையில் எந்த இடத்தில் இருந்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த சர்வே எண்ணை அளந்து எல்லைக்கோடு நிர்ணயிக்கப்பட்டது என அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சிவகங்கை சாலை முடிந்தவுடன் அந்த எல்லையில் இருந்து அளந்து பார்க்கப்பட்டது. சிவகங்கை சாலை எத்தனை அடி அகலம் என்றால் அதை நான் அறிக்கையில் குறிப்பிடவில்லை. சிவகங்கை சாலை எந்த சர்வே

எண்ணில் வருகிறது என்றால் அதை நான் அறிக்கையில் குறிப்பிடவில்லை.

4. எல்லைக் கோடு நிர்ணயம் செய்தது சம்மந்தமாக எந்த புல எண்கள் அளந்து நிர்ணயம் செய்யப்பட்டது என்று நில அளவை துறையினரின் அறிக்கை மற்றும் வரைபடம் அவர்களிடம் இருந்து நான் கேட்டு பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் சொன்ன அறிவுறுத்தலின் படி எல்லை கோடு நிர்ணயம் செய்யப்பட்டது. முறையாக எந்த அளவும் செய்யாததால்தான் மேற்படி விவரம் எனது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

5. அறிக்கை பத்தி 3ல் சர்வே எண்கள் 5/10B, 5/10D1, 5/10D2 ஆகிய இடங்களுக்கு கிழக்கே தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளதாலும் அதற்கு கிழக்கே கட்டிடங்கள் காணப்படுவதாலும் மேற்படி புல எண் வரைபடத்தில் C, D என காட்டப்பட்டுள்ள பகுதியை சரிப்பார்க்க இயலவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் பிரதிவாதிகளின் இடத்தை முழுமையாக அளந்ததாக சொல்லப்படவில்லை என்றால் பிரதிவாதிகள் இடத்தை அளந்துதான் தாவா இடம் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

7. பிரதிவாதிகளின் இடத்தை முழுமையாக நான் அளந்தேனா என்றால் வாரண்டில் பிரதிவாதிகள் இடத்தை முழுமையாக அளக்க சொல்லவில்லை. அளவுகள் சரியாக கிடைக்காத நிலையில் நவீன முறைப்படி (GPS) அளக்க வேண்டுமென ஏன் நான் இருத்தரப்பினர்களிடம்

கேட்க வில்லை என்றால் இருத்தரப்பினர்களும் நவீன முறைப்படி அளக்க வேண்டுமென்று கேட்காததால் நானும் கேட்கவில்லை.

8. சர்வேயர் வரைபடத்தில் பச்சை நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பகுதிதான் மனு சொத்து என்றால் ஆமாம். மனு சொத்தை முழுமையாக அளவீடு செய்ய வருவாய் துறை அதிகாரிகளிடம் அளந்து காண்பிக்க சொன்னேனா என்றால் பச்சை நிறத்தில் உள்ள பகுதியை வருவாய் துறையினர் அளந்து காண்பித்தனர். அதில்தான் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்டுள்ளேன்.

9. எனது அறிக்கையில் பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் முரண்பாடாக உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்கள் 5/15C, 5/10C, 5/10D1 ஆகியவற்றிற்கு தென்புறம்தான் பிரதிவாதிகளின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான்.

10. நான் வாதிகளின் சொத்தை அளக்க முடியவில்லை என அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு பிரதிவாதிகளின் சொத்தையும் முழுமையாக அளக்காமலும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.